Tamil Nadu e-Governance Agency
3 MAR 2011
Chennai-600 035

## சுருக்கம்

தகவல் தொழில் நுட்பவியல் துறை – தமிழக அரசின் சேவைகள் – மாநில சேவை இணையதளம் (State Portal) மற்றும் மாநில சேவை விநியோக நுழைவாயில் (State Services Delivery Gateway) வழியாக தமிழக அரசின் சேவைகளை மக்களுக்கு அளிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாட்டு முகமை (Implementing Agency) – ஒப்புதல் அளித்து அந்நிறுவனத்துடன் முதன்மை சேவை ஒப்பந்தம் (Master Service Agreement) கையெழுத்திடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

**தகவல் தொழில் நுட்பவியல் (ஆ4) துறை**

**அரசாணை (நிலை) எண்.4** **நாள்: 21.02.2011**

படிக்கப்பட்டவை:

1. தகவல் தொழில் நுட்பவியல் துறை அரசாணை (பத்தாண்டு) எண்.20 நாள் 6.8.2009
2. தமிழ் நாடு மின்னாளுமை முகமை முதன்மை செயல் அலுவலர் அவர்களின் 7.10.2010 நாளிட்ட கடித எண் 269/SSDG/2009.
3. தமிழ் நாடு மின்னாளுமை முகமை முதன்மை செயல் அலுவலர் அவர்களின் 16.12.2010 நாளிட்ட கடித எண் 269/C/2009.

/////

**ஆணை:**

தமிழக அரசின் சேவைகளை மாநில சேவை இணையதளம் (State Portal) மற்றும் மாநில சேவை விநியோக நுழைவாயில் (State Services Delivery Gateway) வழியாக தமிழக மக்களுக்கு வழங்கிட ஏதுவாக மத்திய அரசின் தேசிய மின்னாளுமை திட்டத்தின் கீழ் ரூ.16.13 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

2. முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் அளித்தும், தமிழ் நாடு மின்னாளுமை முகமையை (Tamil Nadu e-Governance Agency) மையநோக்கு முகமையாக (Nodal Agency) நியமித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. தமிழக அரசால் வழங்கப்படும் சேவைகளுக்கான விண்ணப்ப படிவங்களை இத்திட்டத்தின் கீழ் பொது மக்கள் இணைய சேவை தளம் (State Portal) வழியாக பதிவிறக்கம் (download) செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மின்னணு முறையில் சமர்ப்பிக்கவும், இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மின்னணு படிவங்கள் மாநில சேவை விநியோக நுழைவாயில் (State Services Delivery Gateway) வழியாக உரிய துறைக்கு அனுப்பப்பட்டு அரசின் சேவைகள் மக்களுக்கு கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்திற்கான செயல்பாட்டு முகமையை (Implementing Agency) தேர்ந்தெடுப்பதில் மாநில அரசுகளுக்கு உதவும் விதமாக, மத்திய அரசு ஏற்கனவே உரிய ஒப்பந்தப்புள்ளி நெறிமுறைகளை பின்பற்றி பின்வரும் ஐந்து நிறுவனங்களை தேர்ந்தெடுத்து இவற்றுள் ஏதேனும் ஒரு நிறுவனத்தை இத்திட்டத்திற்கான செயல்பாட்டு முகமையாக மாநில அரசுகள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளதாக தமிழ் நாடு மின்னாளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் அவர்களின் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது:–

I. திருவாளர்கள். அக்ஸென்சர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்
II. திருவாளர்கள். இன்ஃபோசிஸ் டெக் லிமிடெட்
III. திருவாளர்கள். விப்ரோ லிமிடெட்
IV. திருவாளர்கள். ஹியூலட் பெக்கார்ட்
V. திருவாளர்கள். 3–ஐ இன்ஃபோடெக் லிமிடெட்

5. தமிழ் நாடு மின்னாளுமை முகமை, மத்திய அரசின் வரைமுறைப்படியும், உரிய நெறிமுறைகளை பின்பற்றியும், மேற்குறிப்பிட்ட ஐந்து நிறுவனங்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை (limited tender) வரவேற்று தொழில்நுட்ப குழுவின் பரிசீலனைக்குப்பின், திருவாளர்கள் விப்ரோ லிமிடெட் நிறுவனம், இத்திட்டத்திற்கான செயல்பாட்டு முகமையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனத்துடன் ஒரு முதன்மை சேவை ஒப்பந்தம் (Master Service Agreement) கையொப்பம் இடப்பட வேண்டும் என்றும் இரண்டாவது மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. தமிழக அரசின் சேவைகளை மாநில சேவை இணையதளம் (State Portal) மற்றும் மாநில சேவை விநியோக நுழைவாயில் (State Services Delivery Gateway) வழியாக தமிழக மக்களுக்கு அளிப்பதற்கான செயல்பாட்டு முகமையாக (Implementing Agency) திருவாளர்கள். விப்ரோ லிமிடெட் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கும், இதற்கான அறிவிக்கையை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998–ன் பிரிவு 16 (f)ன் கீழ் வெளியிடுவதற்கும் அறிவிக்கை வெளியிட்டபின் விப்ரோ நிறுவனத்துடனான முதன்மை சேவை ஒப்பந்தத்தில் (Master Service Agreement) தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர், தகவல் தொழில் நுட்பவியல் துறை அரசு முதன்மைச் செயலர் ஆகியோர் கையொப்பம் இடுவதற்கும், அரசு ஒப்புதல் அளித்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பி.டபிள்யூ.சி.டேவிதார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமை செயல் அலுவலர்,
தமிழ் நாடு மின்னாளுமை முகமை, 3வது மாடி, 490/3, அண்ணாசாலை,
நந்தனம், சென்னை – 35.
நிதி (சம்பளம்) துறை, சென்னை – 9, (தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியீட்டில் உரிய அறிவிக்கையினை வெளியிடுவதற்காக)
திருவாளர்கள். விப்ரோ லிமிடெட், 480–481 உத்யோக் விகார்,
ஃபேஸ் – III, குர்காவோன் – 122 016, அரியானா.
மாநில தகவலியல் அலுவலர்,
தேசிய தகவலியல் மையம் (NIC), இ–விங்க், முதலாவது தளம், இராஜாஜி பவன்,
பெசன்ட் நகர், சென்னை – 90.

<u>நகல்:</u>
இணைச் செயலாளர்,
மத்திய அரசின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை,
எலக்ட்ரானிக்ஸ் நிகேதன், 6, சி.ஜி.ஓ. காம்ப்ளக்ஸ், புது டெல்லி – 110 003.
தலைமைச் செயலாளர், சென்னை–9
முதன்மைச் செயலாளர், நிதித் துறை, சென்னை–9
செயலாளர், சட்டத்துறை, சென்னை–9

முதன்மைச் செயலாளர், தகவல் தொழில் நுட்பவியல் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில்நுட்பவியல்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
தகவல் தொழில் நுட்பவியல் (மி .ஆ1) / (மி.ஆ2) துறை, சென்னை – 9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/2/2011
பிரிவு அலுவலர்